بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

### பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் *27.02.2015* அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

**Summary of the Friday Sermon - 27 February 2015 (Tamil)**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் மிகுதியாக தொடர்பு வைத்திருந்த ஹஸ்ரத் மீர் நிஸாமுத்தீன் சாஹிப் அவர்களைப் பற்றிய ஒரு சம்பவத்தை எடுத்துக் கூறுகின்றார்கள்.

***ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்:***

ஹஸ்ரத் மீர் நிஸாமுத்தீன் சாஹிப் அவர்களது மகன் மீர் ஹாமிது ஷா சாஹிபின் திருமணத்தின்போது ஹுஸூர் (அலை) அவர்கள், அவர்களைப் பற்றி ''ஷா சாஹிப் ஒரு எளிமையான இயல்பை உடைய மனிதராவார். இறைவன் இத்தகைய மக்களையே விரும்புகின்றான்'' என்று கூறினார்கள்.

***எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:***

ஹகீம் நிஸாமுத்தீன் சாஹிபுடன் ஆரம்ப தொடர்புகள் இருந்தும்கூட இந்த உதாரணம் மூலமாக இவர்களது தனிச்சிறப்பு பற்றி தெரிய வருகின்றது. ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தங்களது வாதத்திற்குப் பிறகு ஸியால்கோட் சென்றிருந்தார்கள். ஹகீம் நிஸாமுத்தீன் சாஹிப் அவர்களுக்கு ஹுஸூர் (அலை) அவர்கள் அங்கு வாந்ததில் மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. அவர்கள் ஹுஸூர் (அலை) அவர்களை ஒரு வீட்டில் தங்க வைப்பதற்கான ஏற்பாட்டை செய்தார்கள். ஆனால் எந்த வீட்டில் அவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்தார்களோ அந்த வீட்டின் மாடியில் தடுப்புச்சுவர் போதுமான அளவில் இல்லை என்பது தெரிய வந்ததும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஸியால்கோட்டிலிருந்து திரும்பி வந்து விடுவதற்கு எண்ணினார்கள். தடுப்புச்சுவர் தொடர்பாக ஹதீஸிலும் வந்துள்ளது என்பதை நினைவில் வைக்க வேண்டும். எந்த மாடியில் தடுப்புச்சுவர் இல்லையோ அங்கு தூங்கக்கூடாது என்று ஹதீஸில் வந்துள்ளது. அந்த காலத்தில் கோடை காலத்தில் மக்கள் மாடிகளில் தூங்கி வந்தனர். ஏனென்றால் மின்விசிறி போன்றவற்றிற்கான ஏற்பாடு அப்போது இருந்ததில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மாடியில் என்னைப் பார்த்ததும், இந்த வீடு சரியாக இல்லை என்று கூறிவிட்டு அங்கிருந்து திரும்பிச் செல்ல நினைத்தார்கள். ஆனால், இதைப் பற்றி மீர் நிஸாமுத்தீன் சாஹிப் அவர்களுக்கு தெரிய வந்ததும் அவர்கள் எவ்வாறு இவர்கள் திரும்பிச் செல்வார்கள்? சென்று பார்க்கட்டும் என்று கூறினார்கள். உடனடியாக பெண்கள் இருந்த பகுதியில் இருந்த வாசலில் வந்து நின்றார்கள்.

ஹகீம் சாஹிப் கூறினார்: இந்த வீடு பொருத்தமானதாக இல்லை என்பதால் ஹஸ்ரத் சாஹிப் இங்கிருந்து திரும்பிச் செல்ல எண்ணியுள்ளீர்கள் என்று எனக்கு தெரிய வந்தது. வீட்டை பொருத்தவரையில் முழு நகரிலும் எந்த வீடு உங்களுக்கு விருப்பமானதாக இருக்குமோ அதே வீட்டை தங்களுக்கு ஏற்பாடு செய்த தர முடியும். திரும்பிச் செல்வதைப் பொருத்தவரை இங்கிருந்து உடனடியாக திரும்பிச் செல்வதற்காகவா நீங்கள் இங்கு வந்தீர்கள்? அதானல் மக்கள் மத்தியில் எனது மூக்கு அறுந்து போக வேண்டுமா? என்று அவர்கள் கூறினார்கள். இந்த விஷயத்தை எந்த தொனியில் அவர்கள் கூறினார்கள் என்றால் மேலும் எவ்வளவு வலுவாக கூறினார்கள் என்றால் அதைக் கேட்டு விட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முற்றிலுமாக அமைதியாக இருந்து விட்டார்கள். இறுதியில் 'நல்லது; நாம் செல்ல மாட்டோம்' என்றும் கூறினார்கள்.

***ஒரு சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:***

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் ஒரு நபர் வந்தார். அவர்களிடம் நான் உங்களை மிகவும் புகழக்கூடியவன் என்று கூறினார். ஆனால் ஒரு பெரும் தவறு உங்களிடம் ஏற்பட்டுள்ளது. உங்களுக்கு தெரியாதா? ஆலிம்கள் விஷயத்தை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அவர்களை ஏற்றுக் கொள்ள வைப்பதற்கான வழிமுறை அவர்களது நாவிலிருந்தே விஷயத்தை வெளியே வரவழைப்பதாகும். அதற்காக அந்த நபர் கூறிய வழிமுறை இதுவாகும்.

அவர் ஹுஸூர் (அலை) அவர்களிடம் கூறினார்: உங்களுக்கு ஈஸா (அலை) அவர்கள் வஃபாத் ஆகிவிட்டார்கள் என்பது தெரிந்ததும் நீங்கள் குறிப்பிட்ட முக்கியமான ஆலிம்களை விருந்துக்கு அழைத்திருக்க வேண்டும். ஒரு கூட்டத்தை நடத்தி அதில் இந்த விஷயத்தை அவர்களுக்கு முன்னால் எடுத்து வைத்திருக்க வேண்டும். கிறிஸ்தவர்களுக்கு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் இருக்கின்றார் என்ற கொள்கையால் பெரும் உதவி கிடைக்கின்றது. இதனால் அவர்கள் ஆட்சேபனை செய்து இஸ்லாத்திற்கு இழப்பை ஏற்படுத்துகின்றனர். அவர்கள் நம்மிடம் உங்களது நபி வஃபாத் ஆகிவிட்டார்.

எங்களது மதத்தின் தோற்றுனர் வானத்தில் இருக்கின்றார். எனவே அவர் எல்லாரையும் விட சிறந்தவர் ஆவார். இன்னும் சொல்வதென்றால் அவர் தான் இறைவன் என்று அவர்கள் கூறுவதற்கு நாம் என்ன பதில் கூற முடியும்? அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆலிம்களை ஒன்றுதிரட்டி இந்த கேள்விக்கு நாம் என்ன பதில் கூற முடியும்? என்று கேட்கும்படி கூறுகின்றார்கள்.

அந்த நபர் தொடர்ந்து கூறுகின்றார்: அப்போது ஆலிம்கள் உங்களிடம் நீங்களே இதற்கு என்ன பதில் என்று கூறுங்கள் என்று கூறுவர். அப்போது நீங்கள் கூறும் கருத்து தான் சரியாக இருக்க முடியும்.

ஆனால், எனது எண்ணம் என்னவென்றால் இந்த வசனம் மூலமாக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தை நிரூபிக்க முடியும் என்று நீங்கள் கூற வேண்டும். அப்போது ஆலிம்கள் நீங்கள் கூறும் இவ்விஷயம் சரிதான் என்று கூறிவிடுவர். மேலும் பிஸ்மில்லாஹ் என்று கூறி இதைப் பற்றி நீங்கள் அறிவிப்பு செய்யுங்கள். நாங்கள் உங்களுக்கு ஆதரவு அளிப்பதற்கு தயாராக இருக்கின்றோம் என்று கூறிவிடுவர். பிறகு ஹதீஸ்களில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீண்டும் வருவார்கள் என்பதைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்ற பிரச்சனை வரும். ஆனால், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வஃபாத் ஆகி விட்ட பிறகு இதை எவ்வாறு நாம் புரிய வேண்டும்? என்று நீங்கள் கேட்கும் போது ஏதாவதொரு ஆலிம் உங்களைப் பற்றி நீங்கள்தான் வர வேண்டிய அந்த மஸீஹ் என்று கூறி விடுவார். பிறகு எல்லா ஆலிம்களும் அதனை உறுதிப்படுத்தும் சாட்சிகளாக ஆகிவிடுவர் என்று ஆலோசனையைக் கூறினார். இந்த ஆலோசனையைக் கேட்டு விட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனது வாதம் மனிதனின் தந்திரத்தால் செய்யப்பட்டிருந்தால் சந்தேகமின்றி நீங்கள் கூறுவது போலவே நான் செய்திருப்பேன். ஆனால், இது இறைவனின் கட்டளைக்கேற்ப செய்யப்பட்ட வாதமாகும். இறைவன் எவ்வாறு புரிய வைத்தானோ அவ்வாறே நான் செய்துள்ளேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு நெருப்பைக் கொண்டு எங்களை அச்சுறுத்தாதீர்கள். நெருப்பு எங்களது அடிமை மட்டுமல்ல. மாறாக, அடிமையின் அடிமையாகும் என்று ஓர் இல்ஹாம் வந்துள்ளது.

***ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:***

எனக்கு நினைவில் இருக்கின்றது. 1903 –ல் அப்துல் கபூர் என்ற ஒரு நபர் இஸ்லாத்தை விட்டு முர்தத் ஆகி ஆரியராக ஆகியிருந்தார். அவர் தனக்கு தரம்பால் என்று பெயர் வைத்துக் கொண்டார். தர்கே இஸ்லாம் (இஸ்லாத்தை கைவிட்டு விடுவது) என்ற பெயரில் ஒரு நூலை எழுதியுள்ளார். அப்போது ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அதற்கு பதில் எழுதினார்கள். அந்த நூல் 'நூருத்தீன்' என்ற பெயரில் வெளி வந்தது. இந்த நூல் ஒவ்வொரு நாளும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வாசித்துக் காட்டப்பட்டது. தரம்பால் செய்திருந்த இந்த ஆட்சேபனை அதாவது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்காக நெருப்பு குளிர்ந்திருக்கும்போது மற்றவர்களுக்காக அது ஏன் குளிர்வதில்லை? என்ற ஆட்சேபனைக்கு ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறிய பதில் ஹுஸூர் (அலை) அவர்களுக்கு வாசித்துக் காட்டப்பட்டது. அதில் அவர்கள் இவ்விடத்தில் 'நார்' என்பதற்கு வெளிப்படையான நெருப்பு என்று கருத முடியாது. மாறாக, அது எதிர்ப்பின் நெருப்பாகும் என்று எழுதி இருந்தார்கள். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், இவ்வாறு விளக்கம் கூற வேண்டிய தேவை என்ன வந்து விட்டது? என்னைப் பற்றியும் இறைவன் இப்ராஹீம் என்று கூறியுள்ளான். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்காக நெருப்பு எவ்வாறு குளிர்ந்தது? என்ற இந்த விஷயம் மக்களுக்கு புரியவில்லை என்றால் அவர்கள் என்னை நெருப்பில் போட்டுப் பார்க்கட்டும்! இந்த நெருப்பிலிருந்து நான் சாந்தியுடன் வெளியில் வருகின்றேனா? இல்லையா? என்பதைப் பார்க்கட்டும்! என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது இந்த கட்டளையின் காரணமாக ஹஸ்ரத் முதல் கலீஃபா அவர்களும் தமது நூலான 'நூருத்தீன்' –ல் இதே பதிலைத்தான் எழுதினார்கள். மேலும் நீங்கள் நமது இமாமை நெருப்பில் போட்டுப் பாருங்கள். நிச்சயமாக இறைவன் தனது வாக்குறுதிக்கேற்ப அவன் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களை நெருப்பிலிருந்து பாதுகாப்பாக வைத்தானோ அவ்வாறே அவர்களையும் பாதுகாப்பாக வைப்பான் என்று எழுதினார்கள்.

***ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:***

அற்புதங்கள் தொடர்பாக நபிமார்கள் கூறுகின்ற கருத்து தான் சரியானதாக இருக்க முடியும். ஏனென்றால் அவை அவர்கள் பார்த்த விஷயமாக இருக்கின்றது. எந்த நபர் அல்லாஹ்வுடன் அரை மணி நேரம் பேசுகின்றாரோ, கேள்வி கேட்டு அதற்கான பதிலை பெறுகின்றாரோ அவர் கூறும் விஷயங்கள் வரை சிறப்பான நபர்களால் கூட எட்ட முடியாது. அவ்வாறிருக்க கனவே பார்க்காத பொதுமக்களின் நிலை என்ன? அவர்கள் ஒன்றிரண்டு கனவுகளையே பார்த்திருப்பர். பிறகு அவர்கள் அதிகமாக கனவுகள் பார்த்தாலும் கூட அவை இறைவன் புறமிருந்து வந்தவையா? அல்லது மனதிலுள்ள எண்ணமா? என்ற சந்தேகமும் சலனமும் இருக்கும். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், 'நாம் தூங்குவதற்காக தலையணையில் தலையை வைக்கும் போது அங்கிருந்து ஒரு குரல் வர ஆரம்பித்தது. பகலில் மக்கள் உம்மை அதிகமாக ஏசுகின்றனர். அதாவது முழு பகலும் உமக்கு அதிகமான ஏச்சுப் பேச்சுகள் கிடைத்தன. ஆனால், கவலையடைய வேண்டாம். நாம் உம்முடன் இருக்கின்றோம். தலையணையில் தலை வைப்பதிலிருந்து எழுகின்ற வரை அல்லாஹ் இவ்வாறே ஆறுதல் வழங்கி வந்தான்' என்று கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: சில நேரங்களில் முழு இரவும் நான் எனது தூதருடன் நிற்கின்றேன் என்ற இல்ஹாமே வந்து கொண்டிருந்தது.

***ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தன்னைப் பற்றி கூறுகின்றார்கள்:***

எனக்கு வந்துள்ள இல்ஹாம் மற்றும் கனவுகள் ஆயிரம் என்ற எண்ணிக்கையை அடைந்திருக்கும். ஆனால் அவை அந்த நபருக்கு (அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு) ஓர் இரவில் இறங்கிய இல்ஹாம்களுக்கு சமமானவையாக கூட இருக்கவில்லை. அவருக்கு மாலையிலிருந்து காலை வரையில் நான் எனது தூதருடன் நிற்கின்றேன் என்ற இல்ஹாம் வந்து கொண்டேயிருந்தது.

***பிறகு ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:***

நமது பணி நமது சான்றோர்களுக்கு கண்ணியமளிப்பதாகும். ஆனால் நாம் அவர்களை நபிமார்களுக்கு எதிராக நிற்க வைக்கும்போது தேவையில்லாமல் நாம் அவர்களை இழிவுபடுத்துகின்றோம். எனவே, முதல் கலீஃபாவாக இருந்தாலும் சரி அல்லது நானாக இருந்தாலும் சரி அல்லது பிறகு வரக்கூடிய ஏதாவதொரு கலீஃபாவாக இருந்தாலும் சரி அவர்களுக்கு முன்னால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள் என்ற விஷயம் எடுத்துக் கூறப்படும்போது அதற்கு எதிராக இந்த கலீஃபா இதைப் பற்றி இவ்வாறு கூறியுள்ளார் என்று கூறுவது தவறாகும். அவரது அறிவில் இல்லாத ஒரு விஷயத்தை அவர் கூறியிருந்தால் அது சான்றாக ஆகாது. தெரிந்தே கூறியிருந்தால் அது ஒரு கலீஃபாவை அவர் யாரைப் பின்பற்றுகிறாரோ அவருக்கு எதிராக நிறுத்துவதாகும். ஆனால், இது சரியாகும். அதாவது, தான் யாரைப் பின்பற்றுகிறாரோ அவரது ஒரு மேற்கோளுக்கும் கலீஃபா விளக்கம் கூறினால் அவரிடம் நீங்கள் இதற்கு இவ்வாறு பொருள் கொடுக்கின்றீர்கள். ஆனால், இந்த கலீஃபா இதற்கு இவ்வாறு பொருள் கொடுத்துள்ளார் என்று கூறுவதன் மூலம் ஒரு கலீஃபா நபிக்கு எதிராக நிற்கமாட்டார். மாறாக, நபியின் வார்த்தைகளுக்கு விளக்கம் கூறுகின்ற அந்த நபருக்கு எதிராகத்தான் அவர் நிற்கின்றார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இதையும் நினைவில் கொள்ள வேண்டும். கலீஃபாக்களுக்கு எல்லா விஷயமும் தெரிந்திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு விஷயத்தைப் படித்த பிறகு கூட நாம் படித்தது எல்லாமே நமது நினைவில் இருக்க வேண்டும் என்பது கண்டிப்பானதல்ல.

இதிலிருந்து தெளிவாகத் தெரிவது என்னவென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விளக்கமான விரிவுரைக்கு நேர் எதிரான ஒரு விளக்கத்தை கலீஃபாக்கள் கூறினால் அதைப் பற்றி அவர்களுக்கு தெரிவித்து விட வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மேற்கோள்களிலிருந்து இப்போது செய்யப்பட்ட விரைவுரை சரியானதுதான். அவ்வாறான விளக்கவுரையை நாம் கொடுக்க முடியும் என்று காலத்தின் கலீஃபா கருதுகின்றார் என்றால் பிறகு அதுவே ஏற்றுக் கொள்ளப்பட்ட விளக்கவுரையாக இருக்கும். அது சரியில்லாமல் இருந்தால் காலத்தின் கலீஃபா தனது கூற்றை சரி செய்து கொள்வார். ஆனால், கலீஃபா இவ்வாறு கூறினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். இரண்டிற்கும் இடையில் முரண்பாடு ஏன் இருக்கின்றது? என்று கேட்டால் அது தவறாகும். எவ்வித முரண்பாடும் இருக்காது.

பிறகு சூரிய, சந்திர கிரகணம் தொடர்பாக ஒரு சம்பவத்தைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இது நமது ஜமாஅத்தின் புகழ்பெற்ற ஒரு சம்பவமாகும். குஜ்ராத்திலிருந்து வந்த ஓர் எதிரி மவ்லவி எப்போதும் மக்களிடம் மிர்ஸா சாஹிபின் வாதத்தைக் கேட்டு முற்றிலும் ஏமாற்றம் அடைந்து விட வேண்டாம். ஏனென்றால், நபிமொழியில் மஹ்திக்கு அடையாளமாக அவரது காலத்தில் ஒரு ரமலான் மாதத்தில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் கிரகணம் ஏற்படும். எதுவரை இந்த முன்னறிவிப்பு நிறைவேறி சூரியனுக்கும் சந்திரனுக்கும் கிரகணம் நிகழவில்லையோ அதுவரை அவரது வாதத்தை ஒருபோதும் உண்மை என்று கூறி ஏற்றுக் கொள்ள முடியாது என்று அவர் கூறி வந்தார்.

அந்த மவ்லவி உயிருடன் இருக்கும்போதே தற்செயலாக அந்த முன்னறிவிப்பு நிறைவேறியது. சூரியனுக்கும், சந்திரனுக்கும் கிரகணம் ஏற்பட்டது. அந்த மவ்லவியின் அண்டை வீட்டுக்காரராக ஓர் அஹ்மதி இருந்து வந்தார். அவர் கூறினார்: சூரிய, சந்திர கிரகணம் நிகழ்ந்த சமயத்தில் இந்த மவ்லவி தமது வீட்டின் மாடியில் ஏறி இங்குமங்கும் உலாவ ஆரம்பித்தார். அவர் உலாவியவாறே இப்போது மக்கள் வழிதவறிச் சென்று விடுவர்; இப்போது மக்கள் வழிதவறிச் சென்று விடுவர் என்று கூறிக் கொண்ட இருந்தார். முன்னறிவிப்பு நிறைவேறி விட்டதால் மக்கள் மிர்ஸா சாஹிபை ஏற்றுக் கொண்டு நேர்வழியைப் பெறுவர். வழிதவற மாட்டார்கள் என்பதை அவர் புரிந்து கொள்ளவில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: கிறிஸ்தவர்கள் கூட முந்தைய வேதங்களில் கூறப்பட்டுள்ள அனைத்து அடையாளங்களும் நிறைவேறி விட்டன என்பதை ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால், ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களது வாதத்தைக் கேட்டு விட்டு இப்போது தற்செயலாக ஒரு பொய்யர் வாதம் செய்து விட்டார் என்று கூறினர். அவ்வாறே முஸ்லிம்களும் அடையாளங்கள் அனைத்தும் நிறைவேறியதும் தற்செயலாக ஒரு பொய்யர் வாதம் செய்து விட்டார் என்று கூறுகின்றனர். ஆனால், வியப்பான விஷயம் என்னவென்றால், அவ்வாறு தற்செயலாக நடப்பது

கூட பொய்யர்களுக்கு தான் நடக்கின்றது. உண்மையாளர்களுக்கு அது நடக்காது என்று இவர்கள் கருதுகின்றனர். உண்மையாளருக்கு ஆதரவாக இன்றைய நாட்களில் எதுவும் தோன்றவில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மன்னிக்கும் தன்மை, கண்டும் காணாமல் இருப்பது தொடர்பான ஒரு சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஒருமுறை அவர்களது எதிரிகள் சிலர் பிடிபட்டனர். அப்போது நீதிபதி நான் இவர்கள் மீது எந்த நிபந்தனையின் பேரில் வழக்கு தொடருவேன் என்றால் மிர்ஸா சாஹிபின் தரப்பிலிருந்தும் இவர்களுக்கு சிபாரிசு செய்யப்படக் கூடாது. ஏனென்றால், பிறகு அவர் இவர்களை மன்னித்து விட்டு விட்டால் நான் தேவையில்லாமல் இவர்களை கைத்து செய்ய வேண்டிய தேவை என்ன வந்து விட்டது? என்று நீதிபதி கூறினார். அப்போது ஏனைய நண்பர்கள் இல்லை; இவர்களுக்கு கண்டிப்பாக தண்டனை கிடைக்க வேண்டும் என்று கூறினர். குற்றவாளிகளுக்கு நமக்கு தண்டனை கண்டிப்பாக கிடைக்கும் என்பது தெரிய வந்ததும் அவர்கள் ஹஸ்ரத் சாஹிபிடம் வந்து தங்களை மன்னிக்குமாறு வேண்டினார்கள். ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் பணியில் இருந்தவர்களை அழைத்து மன்னித்து விடுங்கள் என்று கூறினார்கள். அதற்கு அவர்கள் நாங்கள் எந்த வகையான சிபாரிசும் செய்ய மாட்டோம் என்று வாக்குறுதி அளித்துள்ளோம் என்று கூறினர். அதற்கு ஹஸ்ரத் அக்தஸ் அவர்கள் அவர்களை மன்னிக்கும்படி கேட்கின்றபோது நாம் என்ன செய்ய முடியும்? என்று கேட்டார்கள். நீதிபதி நான் ஏற்கனவே கூறிய விஷயம் தான் நடந்துள்ளது என்றார். ஹஸ்ரத் சாஹிப் இறுதியில் அவர்களை மன்னித்து விட்டார்கள்.

இந்த சம்பவங்களைக் கேட்டு விட்டு நாம் இன்பம் அடைவதுடன் மட்டும் நின்று விடாமல் இவற்றை நாம் செயல்படுத்த வேண்டும். மன்னிக்கும் தன்மையுடனும் கண்டு காணாமல் நடக்கும் தன்மையுடனும் நடந்து கொள்வதன் பக்கம் அதிகமாக கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கின்றது.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எதிரிகளிடம் ஒவ்வொருவரும் தமது மார்க்கத்தின் சிறப்புகளை எடுத்துக் கூறும் வகையிலுள்ள மாநாடுகளை நடத்துங்கள் என்று கூறியிருந்தார்கள். நான் இறைவன் புறமிருந்து நியமிக்கப்பட்டவனாக இருப்பதால் மற்றவர்கள் அனைவரும் தங்களது மதங்களை தப்லீக் செய்வதை நிறுத்திக் கொள்ளுங்கள் என்று அவர்கள் கூறவில்லை. அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. ஏனென்றால், மற்றவர்களுக்கு தப்லீக் செய்வதற்கு எனக்கு உரிமை இருக்கின்றதோ அவ்வாறே அவர்களுக்கும் இருக்கின்றது என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். எனவே, அவர்கள் நீங்கள் உங்கள் விஷயத்தை எடுத்துக் கூறுங்கள். நான் எனது விஷயத்தை எடுத்துக் கூறுகின்றேன். இந்த வழிமுறையை எடுத்து வைக்காத வரையில் அமைதியை நிலைநாட்ட முடியாது. உண்மை பரவ முடியாது. தான் உண்மையில் இல்லை என்று கருதுகின்ற எவரும் உலகில் இல்லை. எண்ணங்களில் கருத்து வேறுபாடு நிலவும்போது அதை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் வழங்குவது அவசியமானதாகும். இந்த விஷயத்தை பாகிஸ்தான் அரசாங்கமும் அல்லது அரபு நாட்டிலுள்ள மக்கள் புரிந்து கொண்டால் பிறகு தப்லீகின் வழி விரிவானதாக ஆகிவிடும். பிறகு அவர்களுக்கே யார் உண்மையில் இருக்கின்றார்? யார் தவறிழைக்கின்றார்? என்பது தெரிந்து விடும்.

பிறகு ராணிக்கு தப்லீக் செய்வது தொடர்பாக அவர்கள் கூறினார்கள்: ஒரு மன்னருக்கு தப்லீக் செய்வதற்கு முந்தைய காலங்களில் எவருக்கு தைரியம் இருந்தது? இது மிகப்பெரும் தரக்குறைவான அவமரியாதையான செயலாக கருதப்பட்டது. ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கண்ணியத்திற்குரிய விக்டோரியா மகாராணிக்கு கடிதம் எழுதினார்கள். அதில் அவர்கள் அவரை இஸ்லாத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்கள். மேலும் அதை ஏற்றுக் கொண்டால் அதில் உங்களுக்கு நன்மை இருக்கும் என்று எழுதியிருந்தார்கள். இதை கேட்டு விட்டு அவர்கள் தரப்பிலிருந்து ஏதாவதொரு வகையில் வெறுப்பை வெளிப்படுத்துவதற்குப் பகரமாக இந்த கடிதம் மூலம் எந்த அளவு நன்றி தெரிவிக்கப்பட்டது என்றால் எங்களுக்கு உங்களது கடிதம் கிடைத்தது. அதைப் படித்து மகிழ்ச்சி ஏற்பட்டது என்று அதில் எழுதப்பட்டிருந்தது. இன்று ஆங்கிலேயர்களின் ஏஜெண்டாக இருந்ததாக நம் மீது குற்றம் சுமத்துகின்றனர்.

துருக்கியின் தூதுவர் ஒருவர் ஒருமுறை காதியான் வந்திருந்தார். இவரைப் பற்றி கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இன்றிலிருந்து பல வருடங்களுக்கு முன்னால் அஹ்மதிய்யா இயக்கத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உயிருடன் இருந்த சமயத்தில் ஒரு துருக்கி தூதுவர் இங்கு வந்தார். துருக்கி அரசாங்கத்திற்கு வலுவூட்டுவதற்காக அவர் முஸ்லிம்களிடம் நிறைய சந்தா வாங்கினார். அவர் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி கேள்விப் பட்டதும் காதியானுக்கும் வந்தார். அவரது பெயர் ஹுஸைன் காமியாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அவர் பேசிக் கொண்டிருந்தார். இங்கிருந்து எனக்கு அதிகமாக உதவி கிடைக்கும் என்று அவர் கருதினார். ஒரு விருந்தாளிக்கு அளிக்க வேண்டிய கண்ணியத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவருக்கு அளித்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவருக்கு சிறிது அறிவுரை கூறினார்கள். நேர்மையைக் கடைபிடிப்பது நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்வது ஆகியவற்றில் நிலைத்திருக்க வேண்டும் என்று கூறியிருந்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவரிடம் இத்தகைய கசப்பான விஷயங்களைப் பேசியதும், மேலும் நீங்கள் அரசாங்கத்திடமிருந்து பெரும் பெரும் தொகைகளை சம்பளமாகப் பெற்றுக் கொண்டு அதற்கு நம்பிக்கை துரோகம் செய்யாமல் நீங்கள் தக்வாவையும் தூய்மையையும் கடைபிடித்தவாறு இஸ்லாமிய அரசாங்கத்தை வலுவானதாக ஆக்க வேண்டும் என்று

கூறினார்கள். அதை கேட்டு விட்டு அந்த தூதுவர் இங்கிருந்து மிகவும் கோபத்துடன் சென்றார். மேலும் இவர் இஸ்லாமிய ஆட்சியை இழிவுபடுத்துகின்றார் என்று கூற ஆரம்பித்தார். இந்த சமயத்திலும் மவ்லவிகள் கூச்சலிட்டனர். மக்காவையும் மதீனாவையும் பாதுகாத்து வருகின்ற துருக்கி அரசாங்கத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இழிவுபடுத்தி விட்டார்கள் என்று கூறினர். இந்த கூச்சல் எழுந்த போது அதற்கு பதில் கூறும் வகையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நீங்கள் துருக்கியின் அரசாங்கம் மக்கா மற்றும் மதீனாவை பாதுகாக்கின்றது என்று கூறுகின்றீர்கள். ஆனால், மக்காவையும் மதீனாவையும் பாதுகாப்பதற்கு துருக்கி அரசாங்கம் எம்மாத்திரம்? மக்காவும் மதீனாவும் தான் துருக்கி அரசாங்கத்தை பாதுகாத்துக் கொண்டிருக்கின்றது என்று கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எவருடைய உள்ளத்தில் மக்கா மற்றும் மதீனா தொடர்பாக இந்த அளவு தன்மான உணர்வு இருக்குமோ அவரை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் தொடர்பாக அவர்கள் இறை இல்லமான கஃபா உடைக்கப்பட்டு அழிக்கப்படுவதைக் கண்டு மகிழ்ச்சி அடைவார்கள் என்று எப்படி கூற முடியும்? உண்மையான முறையில் மக்காவையும் மதீனாவையும் ஒரு அரசாங்கம்தான் பாதுகாக்கின்றது என்று கூறுவதை விட சகித்துக் கொள்ள முடியாதவர்களாக அவர்கள் இருக்கின்றனர். அரியணையிலிருந்தவாறு இறைவன் தான் மக்காவையும் மதீனாவையும் பாதுகாக்கின்றான் என்றே அவர்கள் கருதுகின்றனர். எந்தவொரு மனிதனும் இவற்றின் பக்கம் ஏறெடுத்துக் கூட பார்க்க முடியாது. ஆனால், வெளிப்படையான முறையில் எதிரிகள் இந்த புனித இடங்கள் மீது தாக்குதல் நடத்தலாம். அப்போது அதனை பாதுகாப்பதற்காக மனிதக் கரங்களை நீட்டலாம். இறைவன் அவ்வாறு நடக்க விடாமல் தடுப்பானாக! ஒருவேளை இத்தகைய சந்தர்ப்பம் வந்தால் பாதுகாப்பு தொடர்பாக எந்த பொறுப்பை இறைவன் மனிதர்கள் மீது சுமத்தியுள்ளார்களோ அதற்கேற்ப அஹ்மதிய்யா ஜமாஅத் எவ்வாறு மற்றவர்களை விட அதிகமாக தியாகம் செய்கின்றது என்பது உலகிற்கு தெரிய வரும். நாங்கள் அந்த இடங்களை மிகவும் புனிதமான இடமாக கருதுகின்றோம். நாங்கள் இந்த இடங்களை இறைவனின் கம்பீரம் வெளிப்படுகின்ற இடங்களாக கருதுகின்றோம். எங்களுக்கு மிகவும் பிரியமான பொருள்களை இந்த இடங்களுக்காக தியாகம் செய்வதை ஈருலகிலும் கிடைத்துள்ள நற்பாக்கியமாகக் கருதுகின்றோம். எந்த நபர் தீய பார்வையுடன் மக்காவின் பக்கம் ஒருமுறை கூட பார்ப்பாரோ இறைவன் அவரை குருடராக்கி விடுவான் என்று நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். எப்போதாவது இறைவன் இந்த பணியை மனிதனிடமிருந்து வாங்கினால் எந்த கைகள் இந்த தீய எண்ணம் கொண்ட கண்களை அழிப்பதற்கு முன்னே வருமோ அவற்றில் நமது கைகள் இறைவனின் அருளால் எல்லாரையும் விட முன்னே இருக்கும். அல்லாஹ்வின் அருளால் இன்றும்கூட ஒவ்வொரு அஹ்மதியின் உள்ளத்திலும் புனித இடங்கள் தொடர்பாக இதே உணர்வுதான் இருக்கின்றது. இந்த உணர்வு எப்போதும் நம்மிடம் இருந்து வரும் இன்ஷா அல்லாஹ். அல்லாஹ் நமது ஈமானிலும் நிச்சய உறுதியிலும் எப்போதும் அதிகரிப்பை ஏற்படுத்துவானாக! தியாகம் செய்யக் கூடியவர்களில் முதல் அணியில் பங்குபெறக் கூடியவர்களாக நம்மை ஆக்குவானாக!

தொழுகைக்குப் பிறகு நான் இருவரது ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். அதில் ஒருவர் மதிப்பிற்குரிய சமீர் பஹுத்தாக சாஹிப் ஆவார்கள். இவர்கள் 24 பிப்ரவரி 2015 –ல் காலையில் ஜெர்மனியில் வஃபாத் ஆகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். இரண்டாவது ஜனாஸா மதிப்பிற்குரிய சவுத்ரி இப்ராஹீம் சாஹிபின் மகனான மதிப்பிற்குரிய சவுத்ரி பஷீர் அஹ்மது சாஹிப் உடையதாகும்.

From : Nazarath Nashr-o-Isha'ath, Qadian - 143 516, Distt Gurdaspur, Punjab.

Translated by **Maulavi M. RAFEEQ AHMAD** for Tamil Desk